V-18
P-75.

**MC.No.9/2022**

Date :- 10.10.2023

PW1 :- மெஹ்ரு நிஷா, க/பெ. யாசர் அரபாத்

(Solemnly affirmed before this court under act X of 1969)

**எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜர்.**

**எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

1. நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ் மற்றும் ஆங்கிலம் இரண்டு மொழிகளில் எனக்கு எழுத படிக்க தெரியும். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் அடங்கியுள்ள சங்கதிகளை படித்து பார்த்து தான் கையொப்பம் இட்டு உள்ளேன் என்றால் சரிதான். நான் புனித பால் மேல்நிலைப் பள்ளியில் படித்தேன். அது அரசு பள்ளி. திருமணத்திற்கு முன்பு நான் எந்த வேலைக்கும் செல்லவில்லை. திருமணத்திற்கு முன்பு தாங்கள், தியாகராயபுரம் வீட்டு எண் 144 என்ற விலாசத்தில் வசித்து வந்தேன்.

2. மேற்கண்ட விலாசத்தில் உள்ள வீடு என் தந்தையின் சொந்த வீடு ஆகும். என் தந்தை ஸ்கிராப் தொழில் செய்து வருகிறார். எங்களுக்கு திருமணம் எந்த தேதியில் நடந்தது என்றால் 17.8.2005 ஆம் வருடம் நடந்தது. எங்கள் திருமணம் இரு வீட்டார் சம்பந்தத்துடன் நடந்த திருமணம் ஆகும். என்னுடைய விருப்பத்தின் பெயர்தான் திருமணம் நடந்தது என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு என் கணவர் என் தந்தை வீட்டில் வீட்டோடு மாப்பிள்ளையாக தான் இருந்தார் என்றால் சரிதான்.

3. திருமணத்தின் போது எனது கணவரும் ஸ்கிராப் தொழில் தான் செய்து வந்தார். திருமணத்திற்கு பிறகு எனது கணவர் எங்களுடன் வீட்டோடு மாப்பிள்ளையாக இருந்தார் என்று கூறியுள்ளேன் எந்த விலாசத்தில் இருந்தும்

Mehsha

10/10/23

என்றால் தியாகராயபுரம் 2 வது தெருவில் வசித்து வந்தோம். நான் தற்போது குறிப்பிட்ட வீடும் எங்களுடைய சொந்த வீடு தான். என்னுடன் பிறந்தவர்கள் இரண்டு சகோதரிகள் மற்றும் ஒரு சகோதரர் ஆகும். என் குடும்பத்தில் நான்தான் மூத்த மகள் என்றால் சரிதான்.

4. திருமணத்திற்கு பிறகு என்னுடைய மாமனார் மற்றும் மாமியாரை நான் சென்று பார்த்து வந்துள்ளேன் என்றால் நாங்கள் இருவரும் சென்று பார்த்து வந்துள்ளோம். திருமணத்திற்கு பிறகு என்னை என் கணவர் நன்றாக தான் பார்த்துக் கொண்டார் என்றால் சரியல்ல. எங்களுக்குள் அவ்வப்போது சண்டை வரும். என்னுடைய நகைகள் அனைத்தையும் அவர் எடுத்துச் சென்று அடமானம் வைத்து விட்டார். எங்கள் குடும்ப பிரச்சனையில் என்னுடைய தந்தையின் தலையீடு இருக்கும் என்றால் சரியல்ல.

5. என் தந்தையும் கணவரும் ஒரே தொழில் செய்வதால் இருவருக்குள்ளும் அவ்வப்போது தொழில் ரீதியாக சண்டை ஏற்படும் என்றால் சரியல்ல. என் கணவரிடம் என்னுடைய தந்தை தொழிலை விட்டுவிட்டு தான் செய்யும் தொழிலுக்கு வருமாறு நிர்பந்தித்தார் என்றும் அதற்கு நான் ஆதரவளித்தேன் என்றால் சரியல்ல. என்னுடைய கணவர் வீட்டோடு மாப்பிள்ளையாக இருந்ததால் என் தந்தையின் தொழில் செய்யுமாறு நிர்பந்தம் செய்யப்பட்டார் என்றால் சரியல்ல.

6. என் கணவர் வீட்டோடு மாப்பிள்ளையாக இருந்ததால் என் தந்தை அவரை மரியாதை கொடுக்கவில்லை என்றும் இழிவாக நடத்தினார் என்றும் சொன்னால் சரியல்ல. கடந்த 2011 ஆம் வருடம், எனது தந்தை என் கணவரின் தொழில் செய்யும் இடத்தை அடித்து உடைத்தார் என்றும் அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி சம்பவத்திற்கு பிறகு என் கணவர் தனி குடித்தனம் சென்றுவிடலாம் என்று கூறியும் நான் அவருடன் செல்ல மறுத்து விட்டேன் என்றால் சரியல்ல.

Melsha.

10/ub

7. நானும் எதிர்மனுதாரரும் சுமார் 10 வருடங்களாக பிரிந்து வாழ்கிறோம். கடந்த 2012 ஆம் வருடத்தில் இருந்து பிரிந்து வாழ்கிறோம். நான் எதிர்மனுதாரரை பிரிந்து வாழ்ந்த காலத்தில் இருந்து அவருடன் சேருவதற்கோ அல்லது விவாகரத்து பெறுவதற்கோ நீதிமன்றத்தில் எந்த பரிகாரமும் கூறவில்லை என்றால் சரிதான். எங்கள் பிரிவுக்குப் பிறகு என் கணவர் எனக்கும் என் குழந்தைகளுக்கும் தேவையான அனைத்து சவரச்சனைகளையும் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. கடந்த 2011 ஆம் வருடம், எதிர்மனுதாரர் தன்னுடைய சொந்த உழைப்பில் சொத்து வாங்க வேண்டும் என்று நினைத்தபொழுது என்னுடைய தந்தை என் பெயரில் தான் அந்த சொத்தை வாங்க வேண்டும் என்று நிரூபித்து என் பெயர் சொத்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. என் தந்தையும் அந்த சொத்து வாங்கும்போது பணம் கொடுத்தார். மேலும் என் கணவர் வாங்கி நகைகளை வைத்து தான் அந்த சொத்தை வாங்கினார்.

**(வழக்கறிஞரின் கோரிக்கை ஏற்று மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

Hel[illegible]
10.10.23.

... written to my dictation ...
... read over to the witness in Tamil
... the presence of the accused and
... by the witness to be correct
10/10/23
Judicial Magistrate ...